MCOP.No.33/2020 in IA. 6/2023
Date : 27.09.2024

<u>உத்தரவு பகரப்பட்டது</u>

1. மனுதாரர் இம்மனுவை கட்டளை 9 விதி 7 உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டத்தின் கீழ் 17.09.2021 தேதி 6வது எதிர் மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்துள்ளார்.

2. எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. 2 மற்றும் 3வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர் உரை தாக்கல் செய்யப்பட்டது. இதர எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர் உரை தாக்கல் செய்யப்படவில்லை.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர் தனது மனுவில் வழக்கு அழைப்பாணையானது தங்களுக்கு காலதாமதமாக சார்பு செய்யப்பட்டதால் தங்களது வழக்கறிஞர் வக்காலத்து தாக்கல் செய்யாததால் ஒருதலைப்பட்ச உத்தரவு ஏற்பட்டதாகவும் அதனை ரத்து செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

4. எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபனையில் அழைப்பாணை சார்பு செய்யப்பட்ட விவரம் மறைக்கப்பட்டு வேண்டுமென்றே வாக்காலத்து தாக்கல் செய்யாமல் இருந்து விட்டு தற்போது பொய்யான காரணங்களை கூறி மனுவை தாக்கல் செய்யப்பட்டதாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

5. மனுதாரருக்கு அசல் வழக்கில் பங்கு பெற்று அவரது எதிர் வாதத்தை எடுக்க கோரி வாய்ப்பு வழங்கும் விதமாக எதிர்மனுதாரர்களுக்கு செலவுதொகை வழங்கி இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர் எதிர் மனுதாரர்களுக்கு செலவு தொகையாக ரூ.500/-ஐ 18.10.2024ம் தேதிக்குள் செலுத்தும் பட்சம் மனு அனுமதிக்கப்படும். தவறினால் இம்மனு தள்ளுபடி செய்யப்படும். மீண்டும் அழைக்க வாய்தா 25.10.2024

(ஒம்/-கே. மாரியப்பன்)
சார்பு நீதிபதி
பத்மனாபபுரம்